# தீபாவளி: இரு நாள்களுக்கு மெட்ரோ ரயில் சேவை நேரம் நீட்டிப்பு

**சென்னை, நவ. 1:** தீபாவளியை முன்னிட்டு, சென்னையில் மெட்ரோ ரயில் சேவை, நேரம் வெள்ளி (நவ.2), சனிக்கிழமைகளில் (நவ.3) நீட்டிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தீபாவளியை முன்னிட்டு, சென்னையில் இருந்து வெளியூர் செல் லும் பயணிகள் கோயம்பேடு, எழும்பூர், சென்ட்ரல் ஆகிய இடங்களுக் குச் சென்று, அங்கிருந்து சொந்த ஊருக்கு பயணிப்பார்கள் என்ற காரணத் தால், மெட்ரோ ரயில் சேவை வெள்ளி (நவ.2), சனிக்கிழமைகளில் (நவ.3) நீட்டிக்கப்படுகிறது.

மெட்ரோ ரயில்கள் வழக்கமாக காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை இயக்கப்படும். ஆனால், வெள்ளி, சனிக்கிழமைகளில் இரவு 11 மணி வரை கூடுதலாக ஒரு மணி நேரம் ரயில்கள் இயக்கப்படும் . இது தவிர, கூடு தலாக மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.